<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 288/2013 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | மாரியப்பன் | நாள் | 29.08.2024 |
| தகப்பனார் பெயர் | மாதையன் | | |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

5) தாவா சொத்திற்குரிய அசல் கிரய ஆவணத்தை தற்போது நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேனா என்றால், இல்லை. மேற்படி ஆவணத்தை என் தந்தை வேறு மாரிமுத்து கவுண்டர் மகன் முத்துவிடம் அடமானம் வைத்து ரூ.2 லட்சம் கடன் பெற்றுள்ளார். அதனால் பத்திரம் மேற்படி அடமானம் பெற்றவரிடம் உள்ளது. மேற்படி ஆவணத்தை அடமானம் பெற்ற மேற்படி முத்துவிடம் பெற்று, என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால், இயலும்.

6) என் பாட்டி சின்னு (எ) சின்னம்மாளுக்கு தாவா சொத்தை யார் விற்றது என்றால், கந்தகவுண்டர் மனைவி பழனியம்மாள் என்பவர் விற்பனை செய்துள்ளார். எந்த வருடத்தில் மேற்படி கிரயம் நடைபெற்றது என்றால், 1954 ம் வருடத்தில் நடைபெற்றது. மேற்படி கிரய சொத்திற்குட்பட்ட சர்வே எண் என்னவென்றால், ச.எண்.65/10 ஆகும். தற்போது மேற்படி சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டது. எவ்வளவு சொத்தை என் பாட்டி கிரயம் பெற்றார் என்றால், மேற்படி கிரய ஆவணத்தின்படி மொத்தம் 0.92 சென்டுகளில் 0.46 சென்ட் நிலத்தை கிரயம் பெற்றுள்ளார். மீதமுள்ள 0.46 சென்ட் நிலத்தை பரிமாற்றம் மூலம் பெற்றுள்ளார். என் பாட்டிக்கு கிரய படி 0.46 சென்ட் நிலம்தான் பாத்தியப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

7) மீதமுள்ள 0.46 சென்ட் நிலத்தை பரிமாற்றம் (Exchange) செய்யப்பட்டதற்கு ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால், இல்லை. மேற்படி பரிமாற்றம் வாய்மொழியாக செய்யப்பட்டது. மேற்படி 0.92 சென்ட் நிலத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால், கடந்த 1954 ம் வருடத்திலிருந்து என் பாட்டி சின்னம்மாள் பெயரில் பட்டா ஏற்பட்டு, பிறகு 1973 ம் வருடத்திலிருந்து என் தந்தை பெயரில் மேற்படி நிலங்களுக்கு பட்டா ஏற்பட்டுள்ளது. மேற்படி என் பாட்டி சின்னம்மாள் மற்றும் என் தந்தை மாதையன் பெயரில் மேற்படி 0.92 சென்ட் நிலங்களுக்குரிய பட்டாவை

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறானது என்றாலும், அவ்வாறு நான் எவ்வித பட்டாவையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், சரியல்ல.

8) வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி 1972 ம் வருடத்திலிருந்து மேற்படி 0.92 செண்ட் நிலம் பழனியம்மாள் பெயரில் உள்ளது என்றால், சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், மேற்படி ஆவணத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது. நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி ஆவணத்தில் எவ்வித திருத்தங்களும் இல்லை என்றால், சரியல்ல.

9) கடந்த 1985 ம் வருடத்தில் வாதிகளின் தந்தை ராமசாமி எனது தந்தை மாதையனிடம் ஏதேனும் அடமானம் வைத்துள்ளாரா என்றால், ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 அடமான செல்லு ரசீதில் உள்ள கையெழுத்து என்னுடைய தந்தையுடையது என்றால், சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி கடந்த 06.09.1992 ம் தேதியில் ச.எண்.65/8 ல் 0.20 செண்டும், ச.எண்.65/9 ல் 0.28 செண்டும், ச.எண்.65/10 ல் 0.09 செண்டும் அடமானம் வைத்து, வாதிகளின் தந்தை என் தந்தையிடமிருந்து மீட்டுள்ளார் என்றால், சரிதான். ஆனால், என் தந்தைக்கு படிப்பறிவு இல்லாததால் மேற்படி சொத்து விவரங்கள் அவருக்கு தெரியவில்லை.

10) வாதிகளின் தந்தை ராமசாமிக்கு மேற்படி ச.எண்.65/10 ல் உள்ள மேற்படி நிலங்களை அடமானம் வைத்து, மீட்டுள்ளதிலிருந்தே மேற்படி நிலங்களை பொறுத்து அவருக்கு உரிமையுள்ளதால்தான் அவர் அடமானம் வைத்துள்ளார் என்றால், சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 வில்லங்க சான்றிதழில் மேற்படி ச.எண்கள்.65/8, 65/9, 65/10 ஆகியவற்றிலுள்ள நிலங்களை அடமானம் வைத்து அதை மீட்டுள்ள நிலையில், ச.எண்.65/10 ல் 0.92 செண்ட் நிலத்தை பொறுத்து வாதிகளின் தந்தைக்கு உரிமையில்லை என நான் கூறுவது தவறானது என்றால், சரியல்ல.

11) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 வில்லங்க சான்றிதழில் 1954ம் வருடத்தில் என் பாட்டி சின்னம்மாள் பெயரில் மேற்படி ச.எண்.65/10ல் 0.92 சென்ட் நிலம் கிரயம் ஏற்பட்டதற்கான பதிவுகள் ஏதேனும் உள்ளதா என்றால், இல்லை. 1954ம் வருடத்தில் என் பாட்டி எவ்வித கிரயமும் செய்யாததால் தான் மேற்படி கிரய பதிவுகள் இடம்பெறவில்லை என்றால், சரியல்ல. 1985ம் வருடத்தில் ஏற்படுத்தப்பட்ட குதவை பத்திரத்திலிருந்தே ச.எண்.65/10ல் 0.92 சென்ட் நிலத்திற்கு வாதிகளின் தந்தை ராமசாமிக்கு தான் உரிமையுள்ளது என்பது தெளிவாகிறது என்றால், சரியல்ல.

12) நில கையகப்படுத்துதல் திட்டத்தின் கீழ் எங்களது நிலம் கையகப்படுத்தப்பட்டதற்கு ஈடாக கருணை அடிப்படையில் எனக்கு மின் வாரியத்தில் பணி வழங்கப்பட்டது என்றால், சரிதான். 1986ம் வருடத்தில் ச.எண்.65/10ல் உள்ள நிலத்தை பொறுத்து மோசடியாக ஒரு ஆவணத்தை தயாரித்து அதனடிப்படையில் அரசாங்கத்தை ஏமாற்றி நான் பணியில் சேர்ந்துள்ளேன் என்றால், சரியல்ல. ச.எண்.65/10ல் சென்ட் நிலத்தில் எத்தனை சென்ட் நிலம் கையகப்படுத்தப்பட்டது என்றால், ச.எண்.65/10 மற்றும் ச.எண்.65/11ல் சேர்த்து மொத்தம் 0.13 சென்ட் நிலம் கையகப்படுத்தப்பட்டது. ச.எண்.65/10ல் குறிப்பாக எவ்வளவு நிலம் கையகப்படுத்தப்பட்டது என எனக்கு தெரியாது.

13) ச.எண்.65/10ல் உள்ள நிலம் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலையில், மேற்படி நிலத்தை மோசடியாக நாங்கள் அபகரித்து கொண்டோம் என்றால், சரியல்ல. அதனால் தான் எங்கள் பெயரில் வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்யகோரி பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. வா.சா.ஆ.9 ஆவணத்தின்படி 21.03.1938ம் தேதியில் வாதிகளின் பாட்டி பழனியம்மாள் கிரயம் பெற்றதிலிருந்து அவர் உயிருடன் உள்ள வரை ச.எண்.65/10ல் உள்ள சொத்தை யாருக்கும் விற்கவில்லை என்றால், சரியல்ல. 1954ம் வருடத்தில் விற்பனை செய்துள்ளார்.

14) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.10 அ–பதிவேடு ஆவணத்தில் 20.12.2017 வரை ச.எண்.65/10ல் வாதிகளின் தந்தை மற்றும் சித்தப்பா பெயர்கள் தான் உள்ளது என்றால், சரியல்ல. ச.எண்.65/10A ல் கிணறு பாகத்தில் எங்களது பெயர்

உள்ளது. வா.சா.ஆ.11 அ–பதிவேட்டிலும் ச.எண்.65/10 ஐ பொறுத்து வாதிகளின் பாட்டனார் பெயர்தான் உள்ளது என்றால், சரியல்ல. வா.சா.ஆ.13 அடங்கல் கணக்கில் ச.எண்.65/10 ல் வாதிகளின் தந்தை பெயரில்தான் உள்ளது என்றால், சரியல்ல.

15) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.14 ஆவணத்தில் 05.01.1976 ம் தேதியில் வாதிகள் ச.எண்.65/10 ல் உள்ள 0.92 செண்ட் நிலத்தில் பொதுவில் 0.23 செண்ட் நிலத்தை வேறு ஒரு நபரிடம் குதவை வைத்துள்ளனர் என்றால், சரியல்ல. மேற்படி சொத்தில் உரிமையுள்ள காரணத்தினால்தான் மேற்படி சொத்தை குதவை வைத்துள்ளனர் என்றால், சரியல்ல.

16) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.18 ஆவணத்தில் வாதிகளின் தந்தை ராமசாமி என் தந்தைக்கு ச.எண்.65/10 ஐ குதவை வைத்ததாக பதிவாகியுள்ளது என்றால், சரிதான். அதே ஆவணத்தில் மேற்படி குதவையை தீர்த்ததற்கான செல்லு ரசீதிலும் ச.எண்.65/10 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். எங்கள் தரப்பில் அ.வ.எண்.183/2013 என்ற வழக்கை வாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்தோம் என்றால், சரிதான். மேற்படி வழக்கில் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால், சரிதான். மேற்படி ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட காலவரையறை சட்டத்தின்படியான மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், சரிதான். மேற்படி தள்ளுபடி உத்தரவை எதிர்த்து சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டு, அதில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.